FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318741

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: ஆண்டு **2026** FIR No.: முத.அ. எண் **01/2026** Date: நாள் **13.03.2026**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் **On 12.03.2026 Before 18.45 hrs** Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **13.03.2026** Time : நேரம் **12.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **13.03.2026** Time : நேரம் **12.00 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி **Kalugumalai Sub Registrar Office Thoothukudi District About 100 Kms North West.**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **திரு.R.சக்கரவர்த்தி** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **ரெங்கையா**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Tahsildar (g) Address : முகவரி Taluk Office, Thiruchendur
OD @ Collectorate 'D' Section, Thoothukudi

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.K.Chellapandi, aged 49/2026, S/o Tr.K.Kaliraj, Sub Registrar (Grade-I), O/o the Kalugumalai Sub-Registry, Thoothukudi District and two anothers.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V.Annalakshmi Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .....:..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13.03.2026

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.03.2026 at 13.30 hrs

Name: பெயர் S. PETER PAUL DURAI
Rank: நிலை .....No. எண் .....

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.01/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

1. Tr.K.Chellapandi, aged 49/2026, S/o Tr.K.Kaliraj, Sub Registrar (Grade-I), O/o the Kalugumalai Sub-Registry, Thoothukudi District. 2. Tr.A.Sekar, aged 59/2026, S/o Tr.Arunachalam, Office Assistant, Sub Registrar Office, Kalugumalai, Thoothukudi District. **Private individual :** 3. Tr.V.Sasikumar, aged 40/2026, S/o M.Velusamy, Door No.4/69, North Street, Araichipatti, Panaivadali Chatram, Thiruvenkadam Taluk, Tenkasi District.	தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திரு.K.செல்லபாண்டி பத்திரம் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்யவரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்காக அவர்களிடமிருந்தும், ஆவண எழுத்தர்கள் மூலமாகவும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 12.03.2026 ஆம் தேதி மாலை 18.45 மணி முதல் 22.30 மணி

வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.R.சக்கரவர்த்தி, துணை வட்டாட்சியர் (வரவேற்பு), வட்டாட்சியர் அலுவலகம், திருச்செந்தூர், மாற்றுப் பணி தலைமை உதவியாளர், 'D' பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி அவர்களுடன் கழுகுமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.R.சக்கரவர்த்தி அவர்கள் கொடுத்த புகார் மனுவை 13.03.2026-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது நண்பகல் 12.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 01/2026, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018–ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் R.சக்கரவர்த்தி, துணை வட்டாட்சியர் (வரவேற்பு), வட்டாட்சியர் அலுவலகம், திருச்செந்தூர். மாற்றுப் பணி தலைமை உதவியாளர், 'D' பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

தூத்துக்குடி. பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் : தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை சார்பதிவாளர் அலுவலக திடீர் தணிக்கை செயல்முறைகள் - சட்ட மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திரு.K.செல்லபாண்டி பத்திரம் பதிவு செய்யவரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவுசெய்வதற்காக அவர்களிடமிருந்தும், ஆவண எழுத்தர்கள் மூலமாகவும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திலிருந்து 12.03.2026-ம் தேதி சுமார் 15.00 மணிக்கு புறப்பட்டு மாலை சுமார் 17.15 மணிக்கு கழுகுமலை சார்பதிவாளர் அலுவலகம் அருகே சென்று எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணைக் கண்காணிப்பாளர், பெண் காவல் ஆய்வாளர் திருமதி.அனிதா மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் இரகசியமாக கண்காணித்ததில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்தும் பத்திர எழுத்தர்கள் மூலமாகவும் பத்திரங்கள் பதிவு செய்வதற்கும், பத்திரப் பதிவு சம்பந்தமான ஆவணங்கள் வழங்குதல் மற்றும் இதர அலுவல்கள் செய்வதற்கும் கழுகுமலை சார்பதிவாளர் லஞ்சமாக பணம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 12.03.2026 மாலை சுமார் 18.45 மணிக்கு கழுகுமலையில், கோவில்பட்டி வழ சங்கரன்கோவில் ரோட்டில், மேற்குபுறத்தில் சரஸ்வதி வாசக சாலை (புதிய) கிளை நூலகம் அருகில் அமைந்துள்ள மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் சென்று திடீர் தணிக்கை செய்ததில் கழுகுமலை சார்பதிவாளர் திரு.K.செல்லபாண்டி என்பவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.49,000/-மும், மேற்படி அலுவலகத்தின் மெயின் நுழைவு வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த அவரது TN 79 A 7017 Suzuki Alto காரில் அவரது பேக்கினுள் "ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் ததியாராதன பக்தசபா" என்று எழுத்துக்களுடன் மேலும் சில எழுத்துக்கள் இருபுறமும் அச்சிடப்பட்ட மஞ்சள் நிற சிறிய துணிப் பையினுள் "11.03.2026" என்று எழுதி ஆரம்பிக்கப்பட்ட குறிப்புகள் எழுதப்பட்ட ஒரு சிறிய துண்டு பேப்பருடன் கத்தையாக காணப்பட்ட ரூ.3,27,000/-மும், மேலும் அதே சிறிய துணிப் பையினுள் வெள்ளைப் பேப்பர் சுற்றப்பட்ட நிலையில் காணப்பட்ட

ரூ.52,000/- ஆகியவற்றிற்கு சார்பதிவாளர் திரு.செல்லபாண்டி அவர்களிடம் விளக்கம் கேட்க அவரால் சரியான முகாந்திரமும், உரிய விளக்கமும் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் அவர் லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி மொத்த பணம் (ரூ.49,000/- + ரூ.3,27,000/- + ரூ.52,000/- =) மொத்தம் ரூ.4,28,000/-மும், அந்த அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.A.சேகர் என்பவரை சோதனை செய்த போது அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.5,500/- குறித்து விளக்கம் கேட்க அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மேற்படி பணம் அவர் லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி ரூ.5,500/-ம், மேற்படி சார்பதிவாளர் அலுவலக காம்பவுண்டிற்குள் நின்று கொண்டிருந்தவர்களை அலுவலக ஹாலில் அமர வைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரான பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த "ஸ்ரீராம் பத்திரம் எழுத்தகம்" -த்தில் பணிபுரியும் திருநெல்வேலி மாவட்டம் பனைவடலிசத்திரத்தைச் சேர்ந்த திரு.சசிகுமார் த/பெ வேல்சாமி என்பவரை சோதனை செய்தபோது அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்த பணம் ரூ.15,000/- குறித்து விளக்கம் கேட்க அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மேற்படி பணம் ரூ.15,000/- அவர் லஞ்சமாக கொடுப்பதற்கு வைத்துள்ள பணம் என்று கருதி ரூ.15,000/-மும், ஆக மொத்தம் (ரூ.49,000/- + ரூ.3,79,000/- + ரூ.5,500/- + ரூ.15,000/- =) ரூ.4,48,500/-ம், மஞ்சள் நிற சிறிய துணிப் பையும், "11.03.2026" என்று எழுதி ஆரம்பிக்கப்பட்ட குறிப்புகள் எழுதப்பட்ட ஒரு சிறிய துண்டு பேப்பரும், வெள்ளைப் பேப்பர் ஒன்றும் நேற்று 12.03.2026-ம் தேதி மாலை சுமார் 18.45 மணி முதல் 22.30 மணிவரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது கழுகுமலை சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் இருந்த சார்பதிவாளர் திரு.கா.செல்லபாண்டி, அலுவலக உதவியாளர் திரு.அ.சேகர் மற்றும் தனிநபர்கள் திரு.வே.சசிக்குமார், திரு.பா.கார்த்திக், திரு.த.பொன்ராஜ், திரு.சீ.சுந்தர்ராஜ் மற்றும் திரு.இ.சிவா ஆகிய அனைவரிடமும் எனது முன்னிலையில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது அலுவலகத்தின் தனி நபர் பணம் கையிருப்பு பதிவேடு -

2026 மற்றும் வருகைப் பதிவேடு - 2026 ஆகியவையும் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,48,500/- மற்றும் மஞ்சள் நிற சிறிய துணிப்பை மற்றும் செயல்முறையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஒப்படைத்து கழுகுமலை சார்பதிவாளர் திரு.K.செல்லபாண்டி மற்றும் அலுவலக உதவியாளர் திரு.A.சேகர் மற்றும் "ஸ்ரீராம் பத்திரம் எழுத்தகம்" அலுவலக பணியாளர் திரு.சசிகுமார் ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd/- 13.03.2026 (R.Chakkaravarthi), Deputy Tahsildar, Collector Office, Thoothukudi. Sir, Received the complaint on today (13.03.2026) at 12.00 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No.01/2026, U/s 7 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 13.03.2026, S.Peter Paul Durai, Deputy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.R.சக்கரவர்த்தி அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.V.அன்னலெட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

13.03.2026

S. PETER PAUL DURAI
Dy. Supdt. of Police,
V&AC, Thoothukudi Detachment.